**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : MC 26/2023**

**Prosecution witness : ம.சா.1** **Date : 29.05.2025.**

| Name : ராசம்மாள் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1) எதிர்மனுதாரர் என் மகன் என்றால் ஆமாம். எனது மருமகள் பெயர் சத்தியபிரியா என்றால் ஆமாம். எனது பெரிய மகன் பெயர் வேலுசாமி, கந்தசாமி என்றால் ஆமாம். வேலுசாமி மனவைி பெயர் ருக்மணி என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் வாடகை வீட்டில் காப்பரத்தாம்பட்டியில் தான் உள்ளார் என்றால் ஆமாம். இந்த வழக்கில் எதிர்மனுதாரர் முகவரி ஜலகண்டாபுரம் ராஜோகோபால் செட்டியார் தெரு என தெரிவித்துள்ளேன் என்றால் ஆமாம்.

2) எதிர்மனுதாரருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன், ஒரு பெண் என்றால் ஆமாம். வேலுசாமி அங்கு தான் உள்ளார். சொந்தமாக தறி போட்டு ஓட்டி வருகிறார். என் கணவர் 1984ல் பேருந்து விபத்தில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். இழப்பீடு வேண்டி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். இழப்பீடு பெற்றேன் என்றால் ஆமாம். என் கணவர் மின்வாரியத்தில் வேலை செய்த போது விபத்தில் அடிப்பட்டு இறந்தார் என்றால் ஆமாம். மின்வாரியத்திலிருந்து பணம் வந்தது என்றால் ஆமாம்.

3) எனக்கு ஓய்வு கால ஊதியம் என் கணவர் சார்பாக வருகிறது என்றால் ஆமாம். தாரமங்கலம் இந்தியன் வங்கியில் ரூ.1000/– வரவு வைக்கப்படுகிறது என்றால் ஆமாம். என் மாமனார் பெயர் மாரப்ப கவுண்டர். அவருக்கு விவசாய நிலம் இருந்ததா என்றால் ஆமாம். சாவதற்கு முன்னர் சொத்துக்களை பிரிந்து கொழுந்தனாருக்கும் என் மகன்கள் மூவருக்கும் உயில் எழுதியுள்ளார் என்றால் ஆமாம். 1994ல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அந்த உயிலின்

அடிப்படையில் கொழுந்தனார் அந்த சொத்துக்களை விற்றுவிட்டார் என்றால் ஆமாம். என் பிள்ளைகளும் 40 செண்ட் நிலங்களை விற்றுவிட்டார்கள் என்றால் ஆமாம்.

4) அந்த நிலத்தை விற்ற வகையில் தான் கௌரிக்கு திருமணம் செய்தார்களா என்றால் இல்லை. ஆரம்பத்தில் நான் கூரை வீட்டில் குடியிருந்தேன் என்றால் ஆமாம். அதன் அருகில் எதிர்மனுதாரர் ஒரு வில்லை வீடு கட்டினார் என்றால் ஆமாம். அந்த வில்லை வீட்டில் தான் நானும் என் மகன் கந்தசாமியும் தற்போது குடியிருக்கிறோம் என்றால் ஆமாம். அந்த பையன் மனநிலை சரியில்லாதவன். என் மகள் கௌரி சொத்தை பிரித்து தர சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த சொத்திற்குண்டான உயில் பத்திரத்தை கௌரி தான் எடுத்து சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. உயிலில் கண்டுள்ள நபர்களுக்கு தான் சொத்து பாத்தியம் என வழக்கு நடந்து வருகிறது என்றால் ஆமாம். அந்த வழக்கில் வழக்கறிஞர் யார் என்றால் பெயர் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் சர்க்கார் வைக்கவில்லை என்றால் வைத்துள்ளேன். எதிர்மனுதாரருக்கு இருதயம் சம்மந்தமான கே.எம்.சி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் ஆமாம். மருமகளுக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) என் பேரன் ரூபேஷ் கீழே விழுந்து கை, கால் உடைந்துவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பையனுக்கு ஏற்கனவே வலிப்பு நோய் உள்ளது என்றால் தெரியாது. தற்போது வரை கே.எம்.சி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் ஆமாம். வைத்திய செலவிற்கு வேண்டி எதிர்மனுதாரர் ரூ.20,00,000/- கடன் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) எதிர்மனுதாரர் கொரோனா தொற்று ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. அதற்காக மருத்துவமனையில் ரூ.10,00,000/- செலவு செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஆகஸ்ட் 2023ல் எனது மகன் பணம் தரவில்லை என்று கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன் என்றால் ஆமாம். 16.08.2023ம் தேதி ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள் என்றால் ஆமாம். அப்போது எனக்கு ரூ.3000 கொடுப்பதாக சொல்லப்பட்டு நான் ரூ.10000 கேட்டு நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன். எனது கணவர் இறப்பு காரணமாக தான் எதிர்மனுதாரருக்கு மின்சார துறையில் வேலை கிடைத்தது.

8) அதன் பிறகு கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து விசாரிக்கப்பட்டு தோரமங்கலம் தொடக்க கூட்டுறவு வங்கியில் கணக்கு துவங்கி மாதம் ரூ.3500/–செலுத்த வேண்டுமென்று உத்தரவானது என்றும் அதன் படி 29.07.2024ம் தேதி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு தொகை செலுத்தப்பட்டு வந்தது என்றால் ஆமாம். அந்த தொகை போதவில்லை. அதனால் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். தற்போதும் நான் ஒத்துக் கொண்ட படி எதிர்மனுதாரர் பணம் கொடுக்க தயாராக உள்ளார் என்றால் அந்த தொகை போதுமானது இல்லை என்பதால் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் அவர்களை மனஉளைச்சல் ஏற்படுத்த வேண்டுமென்றும், அவரிடமிருந்து பணம் பறிக்க நான் பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.